**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 77/2025 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | அர்ஜீன் |
| Father Name | : | வெற்றிவேல் |
| Village | : | சிறுமுகை |
| Taluk | : | மேட்டுப்பாளையம் |
| Age | : | 23 |

A1 absent. A2 and A3 are Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 02.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது சிறுமுகை, மேட்டுப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 30.11.2024 ஆம் தேதியன்று ஊதியூர், கோழிப்பண்ணையில் வேலை செய்து கொண்டிருந்தேன். அங்கு உள்ள கட்டிடத்தில் 4 பேர் பெயிண்டிங் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அந்த கட்டிடத்தில் வேலை செய்தவர்களில் சுரேஷ் என்பவர் சீட் உடைந்து கீழே விழுந்ததாக அதே கட்டிடத்தில் வேலை செய்யும் மற்றொரு நபர் கூறினார். அவருக்கு முதுகில் பலத்த அடிபட்டிருந்ததாக கூறினார். பின்னர் அங்கிருந்தவர்கள் அவர்களது காரில் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். பின்னர் சுரேஷ் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தகவல் கூறினார்கள். நான் மருத்துவமனைக்கு சென்று சுரேஷின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையின்போது சாட்சியாக உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்து பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்ததை யார் மூலமாக கேள்விப்பட்டு தெரிந்துகொண்டேன் என்று போலீசார்

வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். முறையான பாதுகாப்பு உபகரணங்கள் இருந்தும் சுரேஷ் வலிய கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.02 19:18:29 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 77/2025 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | யுவராஜ் |
| Father Name | : | தண்டபாணி |
| Village | : | தாராபுரம் |
| Taluk | : | தாராபுரம் |
| Age | : | 32 |

A1 absent. A2 and A3 are Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 02.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது தாராபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கோவை அக்ரோல் கோழிபண்ணையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 01.12.2024 ஆம் தேதியன்று காலை 7.30 மணியளவில் போலீசார் விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் மோகன்குமார் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

போலீசார் ஏற்கனவே காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடத்தில் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் உள்ள விபரம் பற்றி தெரியாது என்றால் சரியல்ல. படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். சம்பவ இடத்தில் வைத்து பார்வை

மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.02 19:18:41 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 77/2025 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | சரோஜா |
| Husband Name | : | திருநாவுக்கரசு |
| Village | : | ஊதியூர் |
| Taluk | : | காங்கயம் |
| Age | : | 45 |

**A1 absent. A2 and A3 are Present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 02.03.2026

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது ஊதியூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் விவேகானந்தன் வேறு காவல் நிலையத்திற்கு பணிமாறுதலில் சென்றதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 01.12.2024 ஆம் தேதியன்று காலை ஊதியூர் காவல் நிலைய தலைமைக் காவலர் 1991 ரவி நிலைய அலுவலில் இருந்தபோது நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த சிவரூபன் மனைவி இராசம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப் பூர்வமான புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப ஊதியூர் காவல் நிலையக் குற்ற எண். 179/2024 – U/S: 106(1) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பியும் அதன் நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு. ராஜா அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார். **(புகார் அ.சா.ஆ.2 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் இவ்வழக்கு கோப்பை திரு. ராஜா என்பவர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 01.12.2024 ஆம் தேதியன்று காலை 7.30 மணிக்கு சம்பவ இடத்தை ஆஜர் சாட்சிகள் யுவராஜ் மற்றும் மோகன்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்னர் காங்கயம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற இறப்பு இண்டிமேசன் பெயரில் 01.12.2024 ஆம் தேதி காங்கயம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று வழக்கில் இறந்துபோன சுரேஷ் (வயது 30) என்பவரது பிரேதத்தை பார்வையிட்டு ஆஜர் பஞ்சாயத்துகாரர்களுக்கும் சாட்சிகளுக்கும் முறைப்படி சம்மன் சார்வு செய்து சவக்கிடங்கிற்கு முன்பாக வைத்து காலை 9.00 மணியில் இருந்து காலை 11.00 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார். பின்னர் சாட்சிகள் இராசம்மாள், வேல்ராஜ், நாகராசு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். இறந்துபோன சுரேஷ் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனைக்காக தலைமைக் காவலர் 1991 ரவி என்பவர் மூலமாக காலை 11.10 மணிக்கு காங்கயம் அரசு மருத்துவமனை மருத்துவர் அவர்களிடம் தக்க வேண்டுகோள் கடிதத்துடன் ஆஜர்படுத்தியும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார். **(இறந்துபோன சுரேஷ் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5. பின்னர் வழக்கு கோப்புகளை ஆய்வாளர் விவேகானந்தன் தொடர்ந்து புலன் விசாரணை மேற்க்கொண்டு, கடந்த 08.12.2024 ஆம் தேதி மதியம் 13.10 மணிக்கு எதிரி 1 பூபால கிருஷ்ணன், கார்மேகம், ரவி ஆகியோர்கள் நிலையம் ஆஜரான எதிரிகளை கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

6. பின்னர் இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன சுரேஷ் என்பவரின் இறப்பை உறுதி செய்து விபத்துப் பதிவேடு பதிவு செய்த சூரியலட்சுமி மற்றும் சுரேஷ் என்பவர் மீது பிரேத பரிசோதனை செய்த காங்கேயம் அரசு மருத்துவமனை மருத்துவர்

குகப்பிரியா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(விபத்து பதிவேடு மற்றும் பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ 6 மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

7. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு. ராஜா மற்றும் பிரேத பரிசோதனை வழிக்காவலர் 1991 ரவி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 106(1) BNS ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.02 19:18:50 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்